# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>

## <u>அ.வ.எண். 170/2014</u>

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2026 – ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23** – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **23.02.2026** |
| **பெயர்** | **ஹக்கிம் சேட்** |
| **த/பெ** | **பீர் முகமது** |
| **சாட்சி** | **PW1** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 03.20. p.m**

**<u>1 முதல் 6 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –</u>**

1. 2014 ல் வழக்கு தாக்கல் செய்த போது எந்த விலாசத்தில் குடியிருந்தேனோ அந்த விலாசத்தில் தான் தற்போதும் குடியிருக்கிறேனா என்றால் இல்லை. தற்போது நான் குடியிருக்கும் விலாசமானது பழைய எண் 55, புதிய எண் 75, திரு.வி.க தெரு, நாரவாரிக்குப்பம், ரெட்ஹில்ஸ். என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சர்வே எண் 179/7 – ல் சொத்தினை நான் நீதிமன்றத்தின் மூலம் முறையாக வாங்கியுள்ளேன் அதில் தவறுதலாக உள்ள பதிவுகளை நீக்கவும் அந்த சொத்தில் இருந்து பிரதிவாதிகள் என்னை இடையூறு செய்யாமல் இருக்கவும் தாக்கல் செய்துள்ளேன்.

2. பிராதில் உள்ள சங்கதிகள் நான் கூறி தான் தயாரிக்கப்பட்டது என்றால் சரிதான். 2 முதல் 6 பிரதிவாதிகள் 1– ம் பிரதிவாதியின் வாரிசுகள் என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்து குறித்து நீதிமன்றத்தில் உத்தரவு வாங்கியதாக குறிப்பிட்டுள்ள நிலையில் அந்த உத்தரவினை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். சாட்சி தற்போது எனக்கு கேள்வி புரியவில்லை என்று கூறுகிறார். இந்த வழக்கு சொத்து குறித்து பிரதிவாதிகள் மீது வேறு ஏதேனும் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை.

3. பிரதிவாதிகள் அல்லாமல் வேறு தனிநபர்கள் மீதோ வழக்கு சொத்து குறித்து வேறு ஏதேனும் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. வழக்கு சொத்து குறித்து நீதிமன்றம் மூலமாக எந்த உத்தரவும் இல்லை என்றால் சரிதான். என் பிராதில் சர்வே எண்கள் 178/2 –ல் 19 செண்ட், 179/7–ல் 7 செண்ட் நிலங்களை குறிப்பிட்டுள்ளேன் ஆனால் அதில் உள்ள 179/7 குறித்து மட்டும் தான் சொத்து விவரத்தில் காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். மேற்சொன்ன இரண்டு சர்வே எண்ணில் உள்ள சொத்துக்களை ஒரே அவணங்களாக வாங்கினேனா என்றால் இல்லை தனித்தனி ஆவணங்காக வாங்கினேன்.

4. என்படி மேற்சொன்ன இரண்டு ஐட்டம் சொத்துக்களும் யாருக்கு சொந்தம் என்றால் கோபாலகிருஷ்ணன் அவரின் மனைவியான சம்பந்த்ராணிக்கு சொந்தம். 1ம் பிரதிவாதி மணிநாடார் அவர் தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான். 2 முதல் 6 பிரதிவாதிகள் தான் அவரின் நேரடி வாரிசுகள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி மணிநாடார் இறந்த பிறகு அவருக்குண்டான உரிமையை 2 முதல் 6 பிரதிவாதிகளுக்கு மட்டும் என்றால் இருக்கலாம். என் பிராதில் பத்தி 4–ல் அசல் வழக்கு எண் 575/1981–ல் வழக்கு சொத்து குறித்து மணிநாடார்க்கு உரிமை இருந்து சம்பந்த்ராணிக்கு விற்பனை செய்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என் பிராதில் பத்தி 8–ல் வழக்கு சொத்து குறித்து பிரதிவாதிகளுக்கு எந்த உரிமையும் இல்லை என்றும் ஆனால் அப்படி இருந்தும் சொத்தில் இடையூறு செய்கிறார்கள் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

5. என் பிராதில் பத்தி 8–ல் பிரதிவாதிகள் திரும்ப திரும்ப வழக்கு சொத்தில் உட்புகுந்து எனக்கு இடையூறு செய்வதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என்படி எத்தனை முறை உட்புகுந்து இடையூறு செய்தார்கள் என்றால் 2014–ல் மட்டும் தான் இடையூறு செய்தார்கள். அதன் பிறகு சோழவரம் காவல்நிலையத்தில் புகார் அளித்து சி.எஸ்.ஆர் பெற்றேன். காவல்நிலையத்தில் புகார் அளித்தேன் மற்றும் சி.எஸ்.ஆர் பெற்றேன் என்ற சங்கதி என் பிராதிலும் மற்றும் பிரமாண வாக்குமூலத்திலும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் கூறும் சி.எஸ்.ஆர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

6. என் பிராதில் பத்தி 8–ல் கூறியது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும் நான் பொய்யுரைக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ–7 ஆவணம் தான் என் பெயரில் நான் வழக்கு சொத்திற்காக வாங்கிய ஆவணமாக நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ–7 ஆவணத்தை வைத்து தான் வழக்கு சொத்திற்கு உரிமை கோருகிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ 7 கிரைய பத்திரத்தின் அசல்

இல்லை என்றால் சரிதான். அது சான்றிட்ட நகல். அசல் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ 12 தான் நான் கூறும் அசல் கிரையப்பத்திரமா என்றால் சரிதான்.

7. என் பிரமாணவாக்குமூலத்தில் என் பெயரில் உள்ள அசல் ஆவணத்தை நான் குறிப்பிடவில்லை என்றும் சான்றிட்ட நகலாகத் தான் குறிப்பிட்டுள்ளது என்றால் முதலில் சான்றிட்ட நகலை தான் தாக்கல் செய்தேன் பின்பு அசல் சமர்பிக்க கூறியதன் பெயரில் வா.சா.ஆ 12 ஆக குறியீடு செய்யப்பட்டது. மேலே சொன்ன இரண்டு சர்வே எண்கள் அமைந்துள்ள செம்புலிவரம் கிராமத்தில் எனக்கு வேறு எதுவும் சொத்துக்கள் உள்ளதா என்றால் இல்லை. மேற்சொன்ன சொத்துக்கள் கிரையத்திற்கு வருவதாக யார் மூலம் தெரியவந்தது என்றால் விஸ்வநாதன் மற்றும் மூர்த்தி என்பவர் கூறியதன் பெயரில் தெரியவந்தது. மேற்சொன்ன கிரையம் குறித்து யாரிடம் பேசினேன் என்றால் சம்பந்த்ராணி மற்றும் கோபாலகிருஷ்ணன். 2013 அக்டோபர் 5 மாதங்களுக்கு முன்பு அவர்களிடம் சென்று பேசினேன். அப்போது சம்பந்த்ராணி மற்றும் கோபாலகிருஷ்ணன் இருவரும் ஒன்றாக தான் இருந்தார்கள் என்றால் சரிதான்.

8. என் கிரையப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள சம்பந்த்ராணி மற்றும் கோபாலகிருஷ்ணன் அவர்கள் விலாசத்தில் தான் அவர்களை சென்று பார்த்தேனா என்றால் சரிதான். சாட்சி தானாகவே அந்த விலாசத்தில் தான் கோபாலகிருஷ்ணன் வாட்ச்மேன் ஆக வேலை பார்த்து வந்தார் என்று கூறினார். நான் அவர்களை சென்று பார்த்தபோது என்னுடன் விஸ்வநாதன் வந்தாரா என்றால் வரவில்லை ரமேஷ் என்பவர் தான் உடன்வந்தார். ரமேஷ் என்பவர் யார் என்றால் அந்த இடைத்தரகர்க்கு மேல் இருக்கும் தரகராக இருக்கலாம். சம்பந்த்ராணி மற்றும் கோபாலகிருஷ்ணனை நான் நேரடியாக சென்று பார்த்தபோது அவர்களிடம் நேரடியாக கிரையம் பெறாமல் பொது அதிகாரப் பத்திரம் மூலம் சுரேஷ் என்பவரை ஏற்படுத்தி கிரையம பெற காரணம் என்ன என்றால் அவர்கள் பெயரில் நேரடியாக ஆவணங்கள் இல்லாத காரணத்தினால் நீதிமன்றத்தில் தீர்ப்பு மட்டுமே இருந்த காரணத்தினால் மூலப்பத்திரம் ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் சுரேஷ் என்பவருக்கு பொது அதிகாரம் கொடுத்தனர்.

9. என்படி சம்பந்த்ராணி மற்றும் கோபாலகிருஷ்ணன் சுரேஷ் என்பவருக்கு கொடுத்த பொது அதிகாரப் பத்திரம் என்னுடைய கிரைய பத்திரத்திற்கு மூலப்பத்திரம் என்றால் சரிதான். சர்வே எண் 178/2–னை பொறுத்து நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கிரையம் பேசியதாக கூறிய நிலையில் கிரையத்

தொகையை நேரடியாக கோபலகிருஷ்ணனுக்கு கொடுத்தேனா என்றால் கோபலகிருஷ்ணனுக்கு நேரடியாக கொடுத்தேன் சாட்சி மாற்றி சம்பந்த்ராணி மற்றும் கோபாலகிருஷ்ணன் இருவருக்கும் நேரடியாக கொடுத்தேன் என்று கூறுகிறார். கிரைய தொகைகை கிரையத்திற்கு முன்பு எப்போது கொடுத்தேன் என்றால் கிரையத்திற்கு முன்பு முன்பணமாக ரூ. 3,50,000/– கொடுத்தேன் கிரையத்திற்கு பின்பு மீண்டும் ஒரு ரூ. 3,50,000/– கொடுத்தேன். அனைத்தும் ரொக்கமாக தான் செலுத்தினேனா என்றால் ஆம். வங்கி பரிமாற்றம் எதுவும் இல்லை.

10. முன்பணமாக ரூ. 3,50,000/– கிரையத்திற்கு எத்தனை நாட்களுக்கு முன்புகொடுத்தேன் என்றால் 3 மாதங்களுக்கு முன்பு கொடுத்தேன். கோபாலகிருஷ்ணன் மற்றும் சம்பந்த்ராணி வீட்டிற்கு சென்று கொடுத்தேன். அதற்கு ஒப்பந்தமோஅல்லது பணப்பற்று ரசீது பெற்று கொண்டேனா என்றால் எதுவும் இல்லை. மேற்சொன்ன பரிவர்த்தனைக்கு முன்பு கோபாலகிருஷ்ணன் மற்றும் சம்பந்த்ராணியை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. முதல் முறையாக மேற்சொன்ன இருவரையும் தெரிந்திருந்தால் கூட அவர்களிடம் ரசீது வாங்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றவில்லையா என்றால் அவர்களுக்கு வேண்டப்பட்ட ரமேஷ் என்பவர் அறிமுகப்படுத்தியதால் ரசீது எதுவும் பெறவில்லை. ரூ. 3,50,000/– முன்பணம் கொடுக்கும் போது ரமேஷ் தவிர வேறு யாரேனும் இருந்தார்களா என்றால் இல்லை.

11. ரமேஷ் என்பவரை எனக்கு எத்தனை நாட்களாக தெரியும் என்றால் 2013 ல் முன்பணம் செலுத்தும் போது 2 மாதங்கள் வியாபரத்தின் மூலம் தெரியும் ரமேஷின் மகளும் என்னுடைய மகளும் ஒரே பள்ளிக்கூடத்தில் பயின்றாரக்ள் அதில் இருந்து தெரியும். ரமேஷ் எந்த ஊரில் குடியிருக்கிறார் என்றால் கும்மனூர். என்னுடைய கிரைய பத்திரத்தில் ரமேஷ் சாட்சி கையொப்பம் போடவில்லை என்றால் சரிதான். என்னுடைய பிராதிலும் பிரமாணவாக்குமூலத்திலும் மேற்சொன்ன ரமேஷ் குறித்து எந்த விவரமும் இல்லை என்றால் சரிதான். என்னுடைய கிரையப்பத்திரத்தில் ரூ. 7,00,000 – ஐ சுரேஷ் என்பவர் பிரின்சிபல் சார்பாக பெற்று கொண்டதாக குறிப்பிட்டு இருந்தால் அது தவறு என்றால் வழக்கறிஞர் ஆகிய உங்களின் படி அது தவறு. என்படி அது சரி.

**(மேலும் குறுக்கு விசாரணை செய்ய வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது).**

**விசாரணை முடியும் நேரம். 04.15. பி.எம்.**